ஒடிஸா: லஞ்சம் வாங்கி சிக்கிய அரசு அதிகாரி வீட்டில் ரூ.4.27 கோடி ரொக்கம்

புவனேசுவரம், பிப். 25: ஒடிஸாவில் லஞ்சப் புகாரில் கைதான சுரங்கத் துறை அதிகாரி வீட்டில் இருந்து ரொக்கமாக மட்டும் ரூ.4.27 கோடி கைப்பற்றப்பட்ட சம்பவம் அந்த மாநிலத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அங்கு அரசு ஊழியர் வீட்டில் இருந்து இவ்வளவு அதிக தொகை கைப்பற்றப்படுவது இதுவே முதல்முறையாகும்.

கடந்த 2004-ஆம் ஆண்டு ரூ.8,000 சம்பளத்தில் இளநிலை சுரங்கத் துறை அதிகாரியாக பணியில் சேர்ந்தவர் தேவவிரத மொஹந்தி, இப்போது மாநில சுரங்கத் துறை துணை இயக்குநராக உள்ளார். செவ்வாய்க்கிழமை இரவு ரூ.30,000 லஞ்சப் புகாரில் லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் அவரைக் கைது செய்தனர்.

இதைத் தொடர்ந்து புவனேசுவரத்தில் அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள அவரின் வீட்டிலும் லஞ்ச ஒழிப்புத் துறையினர் சோதனை நடத்தினர். அப்போது வீட்டில் பல்வேறு இடங்களில் சொத்து ஆவணங்கள், தங்க நகைகள், கட்டுக்கட்டாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த ரொக்கம் ஆகியவை கைப்பற்றப்பட்டன. கைப்பற்ற பணம் அனைத்தையும் இயந்திரங்கள் மூலம் அதிகாரிகள் எண்ணினர். அதில் மொத்தம் ரூ.4.27 கோடி இருந்தது. இதுதவிர பல்வேறு இடங்களில் நிலம், வீடுகள் வாங்கியதற்கான ஆவணங்கள், தங்க நகைகளும் கைப்பற்றப்பட்டன.

மொஹந்தி பெயரில் மட்டும் 10 வங்கிக் கணக்குகள் மற்றும் லாக்கர்கள் உள்ளன. அவற்றிலும் அதிக அளவில் நகை, பணம், சொத்து ஆவணங்கள் இருக்கும் என்று சந்தேகிக்கப்படுகிறது. இதுவரை அவரின் அலுவலக அறையில் நடைபெற்ற சோதனையில் மேஜைக்கு அடியில் பதுக்கி வைத்திருந்த ரூ.1.20 லட்சம் ரொக்கமும் கைப்பற்றப்பட்டது. இது தவிர இரண்டு மாடி வீடு ஒன்றையும் அவர் கட்டி வருகிறார்.

அரசு ஊழியர் ஒருவர் சுமார் 20 ஆண்டுகளில் கோடிக்கணக்கில் சொத்துகளைக் குவித்திருப்பதும், வீட்டில் ரொக்கப் பணம் மட்டும் ரூ.4.27 கோடி வைத்திருந்ததும் அந்த மாநிலத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு முன்பு 2022-ஆம் ஆண்டு ஒடிஸா நீர்ப்பாசனத் துறை பொறியாளர் வீட்டில் ரூ.3.4 கோடி ரொக்கம் கைப்பற்றப்பட்டது. அந்த மாநிலத்தில் அரசு அதிகாரி வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்ட அதிகபட்ச தொகையாக இருந்தது. இப்போது, மொஹந்தி அதனை விஞ்சிய 'லஞ்ச அதிகாரியாக' பெயரெடுத்துள்ளார்.

ஏழுமலையான் உண்டியல் காணிக்கை ரூ.4.05 கோடி

திருப்பதி, பிப்.25: திருமலை ஏழுமலையான் கோயில் உண்டியல் காணிக்கையாக ரூ.4.05 கோடி வரப்பெற்றதாக தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

பக்தர்களின் எண்ணிக்கை ஏற்ற இறக்கமாக உள்ள நிலையில், புதன்கிழமை நிலவரப்படி தர்ம தரிசனத்துக்கு 12 (தரிசன டோக்கன்கள் இல்லாதவர்கள்) மணிநேரமும், ரூ.300 விரைவு தரிசனம், நேரடி இலவச தரிசன டோக்கன்கள் பெற்ற பக்தர்களுக்கும் 3 முதல் 4 மணி நேரம் ஆனது.

அலிபிரி நடைபாதை வழியாக மதியம் 2 மணிவரை 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள், அவர்களின் பெற்றோர், இரவு 10 மணி வரை அனைத்து பக்தர்களும் அனுமதிக்கப்படுகின்றனர். இதற்கிடையே, செவ்வாய்க்கிழமை முழுவதும் 74,906 பக்தர்கள் தரிசனம் செய்தனர்; 22,869 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர்.

உண்டியல் காணிக்கையை கணக்கிட்டதில் ரூ.4.05 கோடி வரப்பெற்றது என தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

அனில் அம்பானியின் ரூ.3,716 கோடி மதிப்பு பங்களா முடக்கம்

புது தில்லி, பிப். 25: ரிலையன்ஸ் குழுமத் தலைவரும், பிரபல தொழிலதிபருமான அனில் அம்பானிக்கு சொந்தமான ரூ.3,716 கோடி மதிப்பிலான பங்களாவை பண முறைகேடு தடுப்புச் சட்டத்தின்கீழ் அமலாக்கத் துறை முடக்கியுள்ளது.

இதுகுறித்து அமலாக்கத் துறை அதிகாரிகள் கூறியதாவது: வங்கிகளில் பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புக்கு அனில் அம்பானியின் ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனம் மோசடி செய்தது குறித்து அமலாக்கத் துறை பண முறைகேடு தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகிறது. இந்த விசாரணையின் ஒரு பகுதியாக, மும்பையில் பாலி ஹில் பகுதியில் இருக்கும் அனில் அம்பானியின் பிரமாண்ட பங்களாவை அமலாக்கத் துறை முடக்கியுள்ளது.

அந்த பங்களா 66 மீட்டர் உயரமுடையது. மொத்தம் 17 தளங்கள் அதில் உள்ளன. அதன் மதிப்பு ரூ.3,716.83 கோடி ஆகும்.

இதையும் சேர்த்து, அனில் அம்பானிக்கு எதிரான வழக்கில் இதுவரை ரூ.15,700 கோடி மதிப்பிலான சொத்துகளை அமலாக்கத் துறை முடக்கியுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜம்மு-காஷ்மீரில் பயங்கரவாதிகளின் பதுங்குமிடம் கண்டுபிடிப்பு

ஜம்மு, பிப். 25: ஜம்மு-காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் உள்ள எல்லையோர கிராமத்தில் பயங்கரவாதிகளின் பதுங்குமிடத்தை ராணுவத்தினர் புதன்கிழமை கண்டறிந்தனர். அங்கு இருந்த இரு வெடிகுண்டுகள், துப்பாக்கிகள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டன.

இது தொடர்பாக, ஜம்மு-காஷ்மீரை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் ராணுவத்தின் படைப் பிரிவான ஒயிட் நைட் கார்ப்ஸ் வெளியிட்ட எக்ஸ் பதிவில் கூறப்பட்டுள்ளதாவது:

மெந்தார் செக்டாரில் கானிவனப் பகுதியையொட்டிய சலானி காஸ்பலாரி கிராமத்தில் பயங்கரவாதிகளின் பதுங்குமிடம் உள்ளதாக உளவுத் தகவல்கள் கிடைக்கப் பெற்றன. அதனடிப்படையில், ராணுவம் மற்றும் காவல் துறையின் சிறப்பு நடவடிக்கைக் குழுவினர் இணைந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

இந்த நடவடிக்கையில், பயங்கரவாதிகளின் பதுங்குமிடம் கண்டறியப்பட்டது. அங்கிருந்து 4.5 கிலோ எடையுள்ள சக்திவாய்ந்த வெடிகுண்டு, 800 கிராம் எடையுள்ள சிறிய ரக வெடிகுண்டு, இரு சீன தயாரிப்பு கையெறி குண்டுகள், துப்பாக்கிகள், தோட்டாக்கள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு வெடிகுண்டுகள் மற்றும் கையெறி குண்டுகள் வெடிக்கச் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன. இந்த நடவடிக்கையால், பூஞ்ச் மாவட்டத்தில் பயங்கரவாதிகளின் தாக்குதல் சதித் திட்டம் முறியடிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஈரோடு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண். 1192/2026/அ8 நாள்: 24.02.2026
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
முடிவுற்ற திட்ட கணக்கு நிதி (Old Scheme Fund)

1. முழுமையான விபரங்களுக்கு www.tntenders.gov.in இணையதள முகவரியினைப் பார்வையிடவும்.
2. ஈரோடு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் அவர்களால் முடிவுற்ற திட்டக் கணக்குகளின் நிதியில் இருந்து ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி வட்டாரத்தில் நான்கு சாலைப்பணிகள் மேம்பாடு செய்திட சிப்பம் வாரியாக மின்ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது. இரண்டு உறை முறை
3. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக 26.02.2026 முதல் 05.03.2026 வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. பொதுவான நேரம் மற்றும் நாள்:
   (i) மின் ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் பதிவேற்றம் செய்திட கடைசி நாள் மற்றும் நேரம் : 05.03.2026, பி.ப. 3.00 மணி வரை
   (ii) மின் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 05.03.2026, பி.ப. 4.00 மணி.

இணை இயக்குநர் /திட்ட இயக்குநர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஈரோடு மாவட்டம், ஈரோடு
செ.ம.தொ.இ.1363/ஒப்பந்தப்புள்ளி/2026

விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் VISTAAR FINANCE
பதிவு அலுவலகம் : மனை எண் 59 & 60-23, 22 வது குறுக்கு, 29 வது மெயின், BTM 2-வது நிலை, பெங்களூரு 560076. www.vistaarfinance.com

கோரிக்கை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2)-இன் கீழான அறிவிப்பு

விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிட்., (VFSPL) இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், **விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிட்.** நிறுவனத்திடமிருந்து சொத்தின் மீது கடன் பெற்றிருந்த கீழ்க்காணும் கடன்தாரர்கள் அதற்கான சரிவிகித மாதத் தவணைகளைச் (EMI) செலுத்தத் தவறியதால் இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி அவர்களின் கடன் கணக்குகள் செயல்படாச் சொத்துக்களாக (NPA) வகைப்படுத்தப்பட்டுள்ளன. கடனுக்கான ஈட்டுறுதியாகக் கடன்தாரர்கள் அளித்துள்ள அசையாச் சொத்துக்களின் விவரங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன. கடன் விவரங்களும் **விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிட்.,** நிறுவனத்துக்குக் குறிப்பிட்ட நாள்படி கடன்தாரர்கள் செலுத்த வேண்டியுள்ள நிலுவைத்தொகை விவரங்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே ஈடு பெற்றுக் கடனளித்த **விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிட்.,** நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர் எனும் முறையில் கீழே கையொப்பமிட்டுள்ளவர் கீழ்க்காணும் கடன்தாரர்களுக்கு எதிராகக் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன்படி (SARFAESI சட்டம்) நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளார் என்பது இதன் மூலம் கடன்தாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது. பின்வரும் கடன்தாரர்கள் தங்கள் பெயருக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத்தொகைகளை வட்டி மற்றும் இதர கட்டணங்கள் ஏதும் இருப்பின் அவற்றுடன் சேர்த்து இவ்வறிவிப்பு நாளிலிருந்து 60 (அறுபது) நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தத் தவறினால் கீழே கையொப்பமிட்டுள்ளவர் SARFAESI சட்டத்தின் பிரிவு 13, உட்பிரிவு (4)-இன் கீழ் ஈடு பெற்றுக் கடனளித்தவருக்கான உரிமைகளில் ஏதாவது ஒன்றையோ அதற்கு மேற்பட்டவற்றையோ பயன்படுத்த நேரிடும். இதில் சொத்தை சுவாதீனப்படுத்தி விற்பனை செய்யும் உரிமையும் அடங்கும். எனவே பின்வரும் சொத்துக்கள் மீது பொதுமக்கள் எவ்வித ஒப்பந்தமோ பேரமோ வைத்துக் கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறது.

வ. எண்	கணக்கு எண்	கடன்தாரர்கள் மற்றும் கூட்டுக் கடன்தாரர் பெயர்	மொத்த நிலுவை	மொத்தக் கடன் நிலுவை நாள்படி
1	0004SBML02647	1. பாலசுப்பிரமணியம் S, 2. சீனிவாசன் P, 3. சாந்தி S, 4. பொற்கலை வேலுசாமி	ரூ. 2,564,775.02/-	02.12.2026
	கடனீட்டுச் சொத்துக்களின் விவரம்: திருப்பூர் பதிவு மாவட்டம், தற்போது கோயம்புத்தூர் தெற்குப் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி சார்பதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், சேர்வைக்காரன்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த புரவிபாளையம் களம் 25/2 -இல் சர்வே கள SF எண் 13/1D25 மற்றும் முந்தைய SF எண் 13/1D1 மற்றும் தற்போதைய SF எண் 13/1D24, ஆவண எண் 4851/2009-இன்படி எங்களுள் முதலாம் நபருக்குச் சொந்தமான 1092 சதுர அடி மற்றும் ஆவண எண் 929/1999-இன்படி எங்கள் மூவருக்கும் சொந்தமான 1073 சதுர அடி, ஆக மொத்தம் 2165 சதுர அடிக் கொண்ட நிலம். எல்லைகள் மற்றும் அளவுகள் பின்வருமாறு: **கிழக்கு:** மேற்குச் சாலை, **வடக்கு:** SF எண் 13/26, **மேற்கு:** SF எண் 13/22, 13/23, **தெற்கு:** SF எண் 13/1D6. இவற்றுக்கிடையே உள்ள அளவு: கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் - 8.8 மீட்டர், கிழக்கு மேற்காக தெற்குப் பக்கம் - 8.6 மீட்டர், தெற்கு வடக்காக மேற்குப் பக்கம் - 22.2 மீட்டர், தெற்கு வடக்காகக் கிழக்குப் பக்கம் - 22.8 மீட்டர்.			
2	0272SBML00462	1. காளிமுத்து S, 2. கவிதா சுப்ரமணி, 3. திருமக்காள் P	ரூ. 36,79,109.34/-	02.12.2026
	கடனீட்டுச் சொத்துக்களின் விவரம்: அட்டவணை: 1: திருப்பூர் பதிவு மாவட்டம், திருப்பூர் Iஆம் இணை, திருப்பூர் வடக்கு வட்டம், நெருப்பெரிச்சல் கிராமத்தைச் சேர்ந்த SF எண் 79/2, NP.A. 2.47, SF எண் 80, புஞ்சை ஏக்கர் 3.88, தற்போதைய உட்பிரிவு SF எண் 80/1, 80/2, தனி மனைகளில் அடங்கிய மனை எண் 41, மேற்குப் பாகத்தில் தெற்குப் பாகம். எல்லைகள் பின்வருமாறு: அட்டவணை 2-இல் உள்ள சொத்துக்கு வடக்கில், G. விஜயகுமார் அவர்களின் மனை எண் 41-ன் எஞ்சிய பாகத்துக்கு மேற்கில், கீழே குறிப்பிட்டுள்ள மனை எண் 40-ன் பாகத்துக்கு கிழக்கில், மனை எண் 41-ன் வடக்குப் பாகத்துக்குத் தெற்கில். அளவு: கிழக்கு மேற்காக இருபுறமும் - 24% அடி, தெற்கு வடக்காகக் கிழக்குப் பக்கம் - 15% அடி, தெற்கு வடக்காக மேற்குப் பக்கம் - 15 அடி அதாவது மொத்தப் பரப்பளவு 371 சதுர அடிக் கொண்ட காலி நிலம் முழுவதும். **அட்டவணை: 2:** திருப்பூர் பதிவு மாவட்டம், திருப்பூர் Iஆம் இணை, திருப்பூர் வடக்கு வட்டம், நெருப்பெரிச்சல் கிராமத்தைச் சேர்ந்த SF எண் 79/2, NP.A. 2.47, SF எண் 80, புஞ்சை ஏக்கர் 3.88, தற்போதைய உட்பிரிவு SF எண் 80/1, 80/2, தனி மனைகளில் அடங்கிய மனை எண் 43 மேற்குப் பாகம். எல்லைகள் பின்வருமாறு: 20 அடி லேஅவுட் சாலைக்கு வடக்கில், மேற்படி இனம் எண் 1-க்குத் தெற்கில், G. விஜயகுமார் அவர்களின் மனை எண் 41-ன் எஞ்சிய பாகத்துக்கு மேற்கில், மனை எண் 42-க்குக் கிழக்கில். அளவு: கிழக்கு மேற்காக இருபுறமும் - 24% அடி, தெற்கு வடக்காக இருபுறமும் - 40 அடி அதாவது மொத்தப் பரப்பளவு 980 சதுர அடிக் கொண்ட காலி நிலம் முழுவதும். மேற்படி 2 அட்டவணைகளும் ஒன்றிணைக்கப்பட்டதில் மொத்தப் பரப்பளவு 1351 சதுர அடி. மேற்படி நிலங்கள் சோழன் நகர், பட்டா எண் 4425, SF எண் 80/2B4-இல் அமைந்துள்ளது. இந்தச் சொத்தின் வழக்கமான வழி உரிமைகள் மற்றும் புழக்க உரிமைகள் உட்பட. (இது பதிவு செய்யப்பட்ட விற்பனை ஆவண எண் 7064/2021-இல் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளது). இந்தச் சொத்து திருப்பூர் Iஆம் இணை சார்பதிவு மாவட்ட எல்லைகளுக்கும் திருப்பூர் பதிவு மாவட்டத்துக்கும் உட்பட்டது.			
3	0005SBML01428	1. கதிர்வேல் G, 2. காஞ்சிநதியா K	ரூ. 24,65,881.14/-	02.12.2026
	கடனீட்டுச் சொத்துக்களின் விவரம்: திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் சார்பதிவு மாவட்டம், செம்மிபாளையம் கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண்கள்: பழைய எண்: 210/1B, புதிய எண்: 210/1B1A1, செம்மிபாளையம் கிராமத்தில் அமைந்துள்ள **இனம்-1:** திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் சார்பதிவு மாவட்டம், செம்மிபாளையம் கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண்கள்: பழைய எண்: 210/1B, புதிய எண்: 210/1B1A1. எல்லைகள் பின்வருமாறு: **வடக்கு:** சாலை, **தெற்கு:** மனை எண் 3, **கிழக்கு:** சாலை, **மேற்கு:** மனை எண் 1. மொத்தப் பரப்பளவு 2208 சதுர அடி. **இனம்-2:** திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் சார்பதிவு மாவட்டம், செம்மிபாளையம் கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண்கள்: பழைய எண்: 210/1B, புதிய எண்: 210/1B1A1. எல்லைகள் பின்வருமாறு: **வடக்கு:** மனை எண் 2, **தெற்கு:** மனை எண் 6, **கிழக்கு:** சாலை, **மேற்கு:** மனை எண் 4. சொத்தின் மொத்தப் பரப்பளவு 2208 சதுர அடி. ஆக சொத்தின் மொத்தப் பரப்பளவு 4416 சதுர அடி.			

நாள் : 25.02.2026 ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர்
இடம் : கோயம்புத்தூர் விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்

மாண்பமை கடன் வசூல் தீர்ப்பாயம் முன்னிலையில், கோயம்புத்தூர்
ஜவான்ஸ் பில்டிங், எண்.27, T.B. ரோடு, கோயம்புத்தூர் - 641018.
O.A. எண்.285 / 2019

M/s. சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், கோர்ட் தெரு, திருப்பூர் கிளை. ..... மனுதாரர்

- எதிராக -

1) **M/s. ராயல் பாரடைஸ் ஃபுட் வேயர்ஸ்,** கூட்டாளரான K. மோக்தார் அகமது மூலம் பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறது. எண். 51, சிவசண்முகம் தெரு, ஈரோடு - 638001. ... முதல் பிரதிவாதி
2) **K.T. ஷஹானா,** K. துஃபேல் அகமது அவர்களின் மகள், எண். 116, B1, நவகாஞ்சி நகர், A.S. நகர் விரிவாக்கம், காங்கேயம் ரோடு, திருப்பூர் - 641604. ... ஆறாம் பிரதிவாதி

1 மற்றும் 6 எதிர்மனுதாரர்களுக்கு கொடுக்கப்படும் விசாரணை அறிவிப்பு

ஐயா, மேற்குறிப்பிட்ட மனுதாரர் வங்கி தங்களுக்கெதிராக தொகை வசூலிக்கும் பொருட்டு மேற்கண்ட மனுவைத் தாக்கல் செய்து, அம்மனுவானது மாண்பமை கடன் வசூல் தீர்ப்பாயம், கோயம்புத்தூர் முன் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ வருகைக்கென **02-03-2026** அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மாண்பமை கடன் வசூல் தீர்ப்பாயத்தின் முன் **02-03-2026 அன்று தாங்கள் 11.00 மணிக்கு** ஆஜராகவும். தவறினால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும்.

C. ஸ்ரீவத்சன், வழக்கறிஞர்.
எண்.2, ராமர் கோயில் வீதி, ராம் நகர், கோயம்புத்தூர் - 641009.

ஈ.ஐ.டி.-பாரி (இந்தியா) லிமிடெட் PARRYS
CIN: L24211TN1975PLC006989
பதிவு அலுவலகம்: 'டேர் ஹவுஸ்', பாரிஸ் கார்னர், சென்னை - 600 001.
Tel: 044-25306789
Email: investorservices@parry.murugappa.com; Web: www.eidparry.com

காகித வடிவில் உள்ள பத்திரங்களின் மாற்றம் மற்றும் மின்னணு வடிவமாக மாற்ற சிறப்பு சாளரம் குறித்த அறிவிப்பு

இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (செபி) ஏப்ரல் 01, 2019 முதல் பங்குகளை மாற்றுவதை நிறுத்தியது. இருப்பினும், ஏப்ரல் 01, 2019 க்கு முன்பு சமர்ப்பிக்கப்பட்ட, ஆனால் ஆவணங்களில் உள்ள குறைபாடுகள் காரணமாக திருப்பி அனுப்பப்பட்ட காகித வடிவில் உள்ள பங்கு பரிமாற்ற கோரிக்கைகளை மீண்டும் இடமாற்றம் செய்வதற்காக ஜூலை 07, 2025 முதல் ஜனவரி 06, 2026 வரை செபியால் ஒரு சிறப்பு சாளரம் திறக்கப்பட்டது.

முதலீட்டாளர்களுக்கு வசதியாக, SEBI ஜனவரி 30, 2026 தேதியிட்ட சுற்றறிக்கை எண். HO/38/13/11(2)2026-MIRSD-POD/I/3750/2026 மூலம் பிப்ரவரி 05, 2026 முதல் பிப்ரவரி 04, 2027 வரை ஒரு வருடத்திற்கு மற்றொரு சிறப்புச் சாளரத்தைத் திறந்துள்ளது. இந்த சிறப்புச் சாளரத்தின் கீழ், காகித வடிவில் உள்ள பங்குகளை மாற்றுவதற்கான கோரிக்கையை தாக்கல் செய்யும்போது பிற ஆவணங்களுடன் அசல் பங்கு சான்றிதழ்களும் கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும். இந்தச் சாளரத்தின் பொருந்தக்கூடிய தன்மை குறித்து தெளிவு பெற, முதலீட்டாளர்கள் கீழே உள்ள அட்டவணையை பார்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்:

பரிமாற்ற பத்திரத்தை நிறைவேற்றும் தேதி	ஏப்ரல் 01, 2019 க்கு முன் பதிவு செய்யப்பட்டுள்ளீர்களா?	அசல் பங்குசான்றிதழ் உள்ளதா?	தற்போதைய சாளரத்தில் பதிவு செய்வதற்கு தகுதி உள்ளதா?
ஏப்ரல் 01, 2019 க்கு முன்	இல்லை. (இது புதிதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது).	ஆம்	✓
	ஆம் (இது நிராகரிக்கப்பட்டது/ முன்பே திருப்பி அனுப்பப்பட்டது)	ஆம்	✓
	ஆம்	இல்லை	×
	இல்லை	இல்லை	×

மேலும், பின்வரும் வழக்குகள் இந்த சாளரத்தின் கீழ் பரிசீலிக்கப்படாது:

- பரிமாற்றுபவருக்கும் பரிமாற்றம் பெறுபவருக்கும் இடையிலான முரண்பாடுகள் தொடர்பான வழக்குகள்.
- முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு (IEPF) மாற்றப்பட்ட பத்திரங்கள்.

தகுதியுள்ள முதலீட்டாளர்கள் தங்கள் பரிமாற்ற கோரிக்கையை தேவையான ஆவணங்களுடன் நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவருக்கு (RTA) அதாவது KFin Technologies Limited, (Unit: E.I.D.-Parry (India) Limited), Selenium Tower B, Plot 31 & 32, Gachibowli, Financial District, Nanakramguda, Hyderabad - 500 032. Toll Free No:1800-309-4001 அல்லது einward.ris@kfintech.com என்ற முகவரிக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் மின்னஞ்சல் அனுப்பலாம்.

இந்த சுற்றறிக்கையின்படி, பரிமாற்றத்திற்காக மாற்றப்பட்ட பத்திரங்கள், அத்தகைய பரிமாற்ற-மற்றும்-டிமேட் கோரிக்கைகளுக்கான உரிய நடைமுறைகளைப் பின்பற்றிய பிறகு, டிமேட் முறையில் மட்டுமே வழங்கப்படும் என்று பங்குதாரர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. அத்தகைய பத்திரங்கள் பரிமாற்றம் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து ஒரு வருட காலத்திற்கு திரும்ப பெற முடியாத கட்டுப்பாட்டிருக்கும். அத்தகைய பங்குகள் அந்த கட்டுப்பாட்டு காலத்தில் மாற்றப்படவோ / உரிமைக் குறியிடப்படவோ / அடமானம் வைக்கப்படவோ மாட்டாது.

முன்னர் பரிமாற்ற கோரிக்கைகளைச் சமர்ப்பித்த மற்றும் நிலுவையில் உள்ள குறைபாடுகள் காரணமாக இன்னும் மாற்றப்பட்ட பங்குகளைப் பெறாத அனைத்து பங்குதாரர்களும், தங்கள் நலனுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த சிறப்பு சாளரத்தைப் பயன்படுத்துமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

விரிவான சுற்றறிக்கை https://eidparry.com/shareholder-assistance/ என்ற நிறுவனத்தின் வலைத்தளத்திலும் கிடைக்கிறது.

ஈ.ஐ.டி.பாரி (இந்தியா) லிமிடெட்டக்காக
இடம் : சென்னை பிஸ்வ மோகன் ரத்
தேதி : பிப்ரவரி 25, 2026 நிறுவன செயலாளர்

இராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானம்
தலைமை அலுவலகம், இராமநாதபுரம்

ந.க. எண்: அ2 / 575 / 2025 மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்: 23.02.2025

இராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானம் நிர்வாகத்தில் உள்ள விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டம், பள்ளிமடம், அருள்மிகு காளைநாதசுவாமி திருக்கோவில் கீழ்கண்ட திருப்பணி மேற்கொள்ள திவான் மற்றும் நிர்வாகச் செயலாளர் அவர்களால் 27.02.2026 முதல் 31.03.2026 தேதி மாலை 5.00 மணி வரை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரி மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது. பதிவு செய்யப்பட்ட இணையதள ஒப்பந்தப்புள்ளிகள் 01.04.2026 முற்பகல் 11.30 மணி அளவில் இணையதளம் வாயிலாக திறப்பு செய்யப்படும். முன்வைப்புத் தொகை இணையதளம் மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும், அனைத்து ஆவணங்களும் மேற்கண்ட இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் உள்ள ஒப்பந்ததாரர்களின் தகுதி நிபந்தனைகள் உள்ளிட்ட இதர நிபந்தனைகளில் எந்தவொரு திருத்தங்கள் மற்றும் மாற்றங்களும் மேற்கண்ட வலைதளம் மூலமே தெரிவிக்கப்படும். செய்தித்தாளில் வெளியிடப்பட மாட்டாது.

விபரம்

வ. எண்	பணி விபரம்	ஒப்பந்தத் தொகை (including G.S.T.)	முன் வைப்புத் தொகை	பணி முடிக்க வேண்டிய காலம்	ஒப்பந்ததாரர் தகுதி
1	ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருக்கோவில் திருப்பணி - திருக்கோவில் புனரமைப்பு திருப்பணி (திருக்கோயில் சுவாமி சன்னதி கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் புனரமைப்பு செய்திடும் பணி மற்றும் அம்மன் சன்னதி கருவறை அர்த்த மண்டபம், மகா மண்டபம் புனரமைப்பு செய்திடும் பணி, சுவாமி மற்றும் அம்மன் சன்னதி விமானம் புனரமைப்பு செய்து பஞ்சவர்ணம் பூசுதல் திருப்பணி, முழுமை பெறாமல் உள்ள திருமதிள் சுவர் கட்டுமானம் செய்திடும் பணி, திருக்கோயில் முழுவதும் கருங்கல் தரை தளம் அமைக்கும் பணி)	ரூ.4,89,32,049/-	ரூ.2,55,000/-	24 மாதங்கள்	தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத் துறையில் பதிவு பெற்ற நடப்பிலுள்ள தகுதி வாய்ந்த திருக்கோயில் திருப்பணிகளில் அனுபவம் வாய்ந்த ஸ்தபதிகள் / சிற்பிகள் (அல்லது) தமிழ்நாடு அரசு துறை / அரசு நிறுவனங்களில் பதிவு பெற்ற நடப்பிலுள்ள தகுதி வாய்ந்த வகுப்பு III அல்லது அதற்குமேல் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் (இந்து சமய அறநிலையத்துறையில் பதிவு பெற்ற ஸ்தபதி / சிற்பி ஒப்புதல் கடிதத்துடன் கலந்து கொள்ளலாம்)

திவான் மற்றும் நிர்வாகச் செயலாளர்
இராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானம்
இராமநாதபுரம்
செ.ம.தொ.இ / 1385 / ஒப்பந்தப்புள்ளி / 2026

வளுவனாடு கேப்பிடல் லிமிடெட்
கார்ப்பொரேட் ஆபீஸ் : கட்டிட எண் 8/137 C H பைபாஸ் ரோடு, கருவம்பரம் (போஸ்ட்) மஞ்சேரி, மலப்புரம், கேரளா. பின் : 676123 PH : 7594900175
பதிவு அலுவலகம்: பிளாட் எண் 20, 112, பர்மேஷ் பிசினஸ் சென்டர்-1, கர்கர்டுமா கம்யூனிட்டி சென்டர்-5, டெல்லி-110092, புது டெல்லி, இந்தியா
CIN:U55101DL1986PLC023914 Email: vcIauction123@gmail.com Website: www.valluvanadueasymoney.com

தங்க நகை ஏலம் அறிவிப்பு

வள்ளுவநாடு கேப்பிடல் லிமிடெட்டின் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிளைகளில் நிலுவையில் உள்ள தங்க அடகு கணக்குகள் கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள ராமநாதபுரம் கிளையில் வைத்து 26-03-2026 காலை 10 மணி முதல் பொது ஏலம் செய்யப்படும் என்று தங்கம் அடகு வைத்த உரிமையாளருக்கும் பொதுமக்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்றைய தினம் ஏலம் முடிக்கப்படாவிட்டால் எந்தவொரு முன்னறிவிப்பின்றி எங்களுடைய கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள ராமநாதபுரம் கிளை:கட்டிடம் எண்: 063/162 1 வது மாடி, ராம் பிளாசா, 432, நஞ்சுண்டபுரம் சாலை, ராமநாதபுரம், கோயம்புத்தூர் 641045 இடத்தில் வைத்து 26-03-2026 முதல் 15-04-2026 வரையுள்ள தேதிகளில் ஏலம் பூர்த்தி செய்யப்படும்.

இந்த தங்க ஆபரணங்கள் தங்க அடமானத்தில் வைக்கப்பட்டவை.மேலும் அடகு வைத்த தங்க ஆபரணங்களின் கணக்குகளில் வட்டி செலுத்துவதிலும் கணக்குகள் மூடி தங்க ஆபரணங்களை திரும்ப பெறுவதிலும் வீழ்ச்சி வந்துள்ள உரிமையாளர்களின் கணக்குகள் தான் இவை. ஏலத்தில் விவரிக்கப்பட்ட அடகு விவரங்கள் எல்லாம் அந்தந்த கிளைகளில் அறிவிப்பு பலகையில் அறிவிக்கப்பட்டு, அந்தந்த வாடிக்கையாளர்களுக்கு பதிவு செய்யப்பட்ட கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. கிளையின் பெயர்/அடகு வைக்கப்பட்ட எண் போன்றவை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

RAMANATHAPURAM: 00860100000184, 00860100000334, 00860100000335, 00860100000336. UKKADAM: 00840100000408, 00840100000419, 00840100000424, 00840100000429, 00840100000437, 00840100000438, 00840100000448, 00840100000449, 00840100000465, 00840100000468, 00840100000474, 00840100000476, 00840100000477.

மேலே கொடுக்கப்பட்ட ஏலத்தில் பங்கெடுக்க விருப்பமுள்ளவர்கள் முன் அறிவிப்பிற்கு பிறகு தங்களது அடையாள அட்டையை சமர்ப்பிக்கவேண்டும்.ஏலத்தில் பங்கேற்க அனுமதிப்பது மற்றும் ஏலத்தை உறுதிப்படுத்துவதை குறித்து உள்ள முடிவு நிறுவனத்தின் சொந்த விருப்பபடி இருக்கும். மேலும் தகவல்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு 10-03-2026 அன்று அல்லது அதற்கு முன்னர் 7594900175 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
வளுவனாடு கேப்பிடல் லிமிடெட்ட்

கனரா வங்கி Canara Bank
சிண்டிகேட் Syndicate

விற்பனை அறிவிப்பு

கடன் வசூல் மேலாண்மைக் கிளை, கோயம்புத்தூர்.

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதிகள் 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் மற்றும் பொதுமக்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், கடன் வழங்கிய வங்கியால் பிணையத்திற்குள்ளான/ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது, **கனரா வங்கி**யின் சம்பந்தப்பட்ட கிளையின், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் (கீழே பட்டியலில் குறிப்பிட்டபடி) செய்து கொள்ளப்பட்டது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் ஆகியோரிடமிருந்து கடன் வழங்கிய வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைகளுக்காக **'எங்குள்ளதோ உள்ளபடி' 'என்ன உள்ளதோ அப்படியே'** மற்றும் **'என்ன நிலையில் உள்ளதோ உள்ளபடி'** என்கிற நிலையில் கீழ்வரும் விபரப்படி விற்பனை செய்யப்படுகிறது.

கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் பெயர் மற்றும் விலாசம் : 1. M/s.S R டெக்ஸ் (நிறுவனம்), வரப்பருத்திக்காடு, 3/131, சின்ன கோடங்கிபாளையம், கோடங்கிபாளையம், பல்லடம் (தாலுகா), திருப்பூர் – 641 662, **2. K.P.சுப்ரமணியம் (உரிமையாளர்),** த/பெ.பப்புசாமி, வரப்பருத்திக்காடு, 3/131, சின்ன கோடங்கிபாளையம், கோடங்கிபாளையம், பல்லடம் (தாலுகா), திருப்பூர் – 641 662, **3. பாபுசாமி.R (உத்தரவாதமளித்தவர்),** த/பெ.பப்புசாமி, வரப்பருத்திக்காடு, 3/131, சின்ன கோடங்கிபாளையம், கோடங்கிபாளையம், பல்லடம் (தாலுகா), திருப்பூர் – 641 662.

31.01.2026 தேதி வரை நிலுவைத் தொகை : **ரூ.1,53,39,833.17** (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து மூன்று லட்சத்து முப்பத்து ஒன்பதாயிரத்து எண்ணூற்று முப்பத்து மூன்று மற்றும் பைசா பதினேழு மட்டும்) மற்றும் பின் வட்டி மற்றும் பிற செலவுகள்.

சொத்து விபரம் : திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் சார் பதிவு மாவட்டம், பல்லடம் தாலுகா, கோடங்கிபாளையம் கிராமம், சர்வே எண்.354/3B, இதிலமைந்த 0.69 ஏக்கர் அமைந்த **எல்லைகள் விபரம் :** சர்வே எண்.354/3A ல் உள்ள சொத்துக்களுக்குக் கிழக்கு, சர்வே எண்.354/3Cல் உள்ள சொத்துக்களுக்கு மேற்கு, சர்வே எண்.354/4Bல் உள்ள சொத்துக்களுக்கு வடக்கு, கிழமேல் வழித்தடத்துக்குத் தெற்கு. வருவாய்ப் பதிவேடுகளின்படி இதன் பரப்பு, சர்வே எண்.354/3Bல் 0.28.00 ஹெக்டேர்.
நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.1,05,00,000/– முன்வைப்புத் தொகை : ரூ.10,50,000/– ஏல உயர்வு மடங்கு : ரூ.1,00,000/–
முன்வைப்புத் தொகை (EMD) செலுத்தக் கடைசி நாள் : 30.03.2026 காலை 11.00 மணிக்கு முன்னதாக.
சுவாதீன நிலை : அடையாள (Symbolic) சுவாதீனம். நோட்டீஸ் தேதி : 23.02.2026

மின்-ஏலத் தேதி மற்றும் நேரம் : 30.03.2026

காலை 11.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை.
(ஒவ்வொன்றிற்கும் 5 நிமிட கால அளவிலான அளவற்ற நீட்டிப்புகளுடன் - விற்பனை நிறைவு பெறும் வரை)
சொத்தினைப் பார்வையிடும் நாள் மற்றும் நேரம் : 29.03.2026 காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு மின்–ஏலத்தோடு தொடர்புடைய கனரா வங்கியின் இணையதளத்தின் **(www.canarabank.com)** 'இ–ஆக்ஷன் லிங்க்'கில் அணுகவும். அல்லது **கனரா வங்கியின் கோயம்புத்தூர், கடன் வசூல் மேலாண்மைக் கிளையின் அதிகாரபூர்வ அதிகாரியை** எந்தவொரு வேலை நாளிலும், அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம். **(போன் : 0422-2549459/2555655; மொபைல் : 94890 43584) மின்னஞ்சல் : cb4712@canarabank.com**

மின் ஏலத்தின் தலைவாயில் (போர்டல்) : https://baanknet.com/

அதிகாரபூர்வ அதிகாரி
இடம் : கோயம்புத்தூர் கனரா வங்கி

பாங்க் ஆஃப் பரோடா Bank of Baroda

பேங்க் ஆப் பரோடா
கிளை : ROSARB (பிராந்திய ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் வசூல் கிளை)
2வது தளம், எண்.82, பேங்க் ரோடு, கோயம்புத்தூர் – 641 018
போன் : 0422 2302423, 2302324. மின்னஞ்சல் : sarcoi@bankofbaroda.bank.in

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை –IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) & 8(6)–ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்–ஏல விற்பனை அறிவிப்பு.

கீழே விவரிக்கப்பட்டுள்ள பாங்க் ஆப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமின்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளான/ஈடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, நிலுவையை வசூலிக்க வேண்டி **"எங்கு உள்ளனவோ அந்நிலையில்", "என்ன உள்ளனவோ அப்படியே", "எப்படியுள்ளதோ அப்படியே"** மற்றும் **"பொறுப்பேற்காத நிலையில்"** எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / உத்தரவாதம்அளித்தவர்கள் பெயர் மற்றும் விலாசம்	அசையாச் சொத்தின் சுருக்க விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன்	மொத்த நிலுவைத் தொகை	மின் ஏலத் தேதி / நேரம்	1. குறைந்தபட்ச விலை, 2. முன் வைப்புத் தொகை 3. ஏல உயர்வுத் தொகை	சுவாதீன நிலை (ஆக்கபூர்வ/ கொள்நிலை)	சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம்
M/s. கன்ஷிகா இண்டஸ்ட்ரீஸ் (கடன்தாரர்), பிரதிநிதியாக அதன் உரிமையாளர் திரு. B.சந்தோஷ், த/பெ. C.போஜன், பதிவு அலுவலகம்: எண்.7/211, T.மணிஹட்டி கிராமம், கட்டபெட்டு, நீலகிரி – 643 214. **திரு. B.சந்தோஷ் (அடமானதாரர்),** த/பெ. C.போஜன், உரிமையாளர் : M/s. கன்ஷிகா இண்டஸ்ட்ரீஸ் எண்.7/211, T.மணிஹட்டி கிராமம், கட்டபெட்டு, நீலகிரி – 643 214.	நீலகிரி பதிவு மாவட்டம், கோத்தகிரி சார் பதிவு மாவட்டம், உதகமண்டலம் தாலுகா, கக்குச்சி பஞ்சாயத்து போர்டு, கக்குச்சி கிராமம், பழைய சர்வே எண்.511/5, புதிய சர்வே எண்.1029, T.மணிஹட்டி. எல்லைகள் : தெற்கு – ஹாலமுத்தாளின் போர்ஷன் சொத்து, வடக்கு – ஓடை, மேற்கு – T.மாதனின் போர்ஷன், கிழக்கு – ஓடை. மொத்தம் 1.00 ஏக்கர் நிலம், அங்கு கட்டப்பட்ட தொழிற்சாலைக் கட்டிடத்துடன். தொழிற்சாலைக் கட்டிடம் தரைத் தளம் 3690 சதுரடி, தொழிற்சாலைக் கட்டிடம் முதல் தளம் 2790 சதுரடி, திறந்த நிலை ஷெட் முதல் தளம் 922.50 சதுரடி, ஹீட்டர் அறை தரைத் தளம் 342 சதுரடி, மொத்தம் 7744.50 சதுரடி. மேற்படி சொத்து C.போஜன் மகன் திரு. B.சந்தோஷ் பெயரில் உள்ளது. மேலும் வங்கிக்குப் பிணையப்பட்ட அசையும் சொத்துக்களான இயந்திரங்களுடன். **அட்சரேகை / தீர்க்கரேகை : 11.423187, 76.790243**	நிலுவைத் தொகை : 25.02.2026 தேதியன்று, ரூ. 1,88,62,429/– (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து எட்டு லட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நானூற்று இருபத்து ஒன்பது மட்டும்) மற்றும் பின்வட்டி, செலவுகள், பிற கட்டணங்களுடன்.	16.03.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.69,38,000/– (நிலம் மற்றும் கட்டிடம்) ரூ.52,12,000/– (ஆலை மற்றும் இயந்திரம்) ரூ.1,21,50,000/– 2. ரூ.12,15,000/– 3. ரூ.50,000/–	கொள்நிலை (Physical) சுவாதீனம்	12.03.2026 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு **https://bankofbaroda.bank.in/e-auction** இணையதளம் 'லிங்க்'கில் மற்றும் ஆன்லைன் ஏலத்தின் போர்டல் **https://baanknet.com** –ல் பார்வையிடலாம். மேலும் விருப்பமுள்ள ஏலதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை **போன் : 9790247824** என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 25.02.2026
இடம் : கோயம்புத்தூர்
(அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)
பேங்க் ஆஃப் பரோடா